# தொல்காப்பியப் பொருளியல் கருத்துக்கள்

**க. செல்வராஜ்,**
முனைவர்.
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
திருவள்ளுவர் அரசு கலைக்கல்லூரி,
இராசிபுரம் - 637 401
நாமக்கல் மாவட்டம்

**அறிமுகம்**

இலக்கணம் என்பது எழுதுவதற்கும் பேசுவதற்கும் பொருளைத் தெளிவாக்குவதற்கு மட்டுமன்று, பழைய இலக்கியங்களைப்படித்துப் பொருள் புரிந்து கொள்வதற்கும் பயன்படுவது. அவ்வகையில் தமிழ் மொழியின் இலக்கண முறையைத் தனிச்சிறப்புடன் எடுத்துக்காட்டும் நூல் தொல்காப்பியம். தொல்காப்பியம் என்னும் சொற்றொடரினைத் தொல்காப்பியம் என்று இரு பிரிவாகப் பிரித்துத் தொன்மையான காப்பியம் என்று கொள்ளாமல், தொல் + காப்பு + இயம் என்று மூன்று பிரிவாகப் பிரித்துத் தொன்மை + இயம் + காப்பு என்று அன்வயப்படுத்திக்கொண்டு பார்க்க முயற்சிக்க வேண்டும். அப்படிப் பார்த்தால் தொன்மையான தன்மையைக் காப்பது" தொன்மையான மரபைக் காப்பது; தொன்மையான இலக்கணத்தைக் காப்பது; தொன்மையான எழுத்தைக்காப்பது; தொன்மையான சொல்லைக்காப்பது; தொன்மையான தமிழ்ப் பண்பாட்டைக் காப்பது; தொன்மையான தமிழ் மொழியைக்காப்பது என்றெல்லாம் பொருள் விசாலமாகும். இதன் மூலம் தொல்காப்பியத்தைப் பற்றிய நமது அறிவு இன்னும் விரிவடையும்.

உலகில் தோன்றியுள்ள இலக்கண நூல்கள் அனைத்தும் எழுத்துக்கும், சொல்லுக்கும் மட்டும் இலக்கணம் கூறுகின்றன. ஆனால் தொல்காப்பியம் மட்டுமே பொருள் இலக்கணத்தையும் சேர்த்தே கூறுகிறது. அந்தப் பொருள் இலக்கணத்தையும் அகஇலக்கணம், புற இலக்கணம் என்றும் பிரித்துக்கூறுவது தனிச்சிறப்பு. பொருளதிகாரம் என்பது வாழ்க்கைக்கான இலக்கணம் என்பர். பொருளதிகார இயல்கள் ஒன்பதில் மையமாக அமைந்திருப்பது பொருளியல் ஆகும். அதாவது அகத்திணையியல், புறத்திணையியல், களவியல், கற்பியல் ஆகிய நான்கு இயல்களுக்கு அடுத்ததாகவும், மெய்ப்பாட்டியல் உவமையியல், செய்யுளியல், மரபியல் ஆகிய நான்கு இயல்களுக்கு முன்னதாகவும் பொருளியல் அமைந்துள்ளது. அப்பொருளியலில் அமைந்துள்ள சில கருத்துக்களை விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

**பொருளியல்**

அகத்திணையில் முதல் மரபியல் ஈறாக உள்ள பொருளியல் தவிர்த்த எட்டுஇயல்களின் பொருளினது தன்மை உணர்த்துதலினால் இவ்வியல் பொருளியல் ஆயிற்று.

"இது பொருளியல்பு உணர்த்தினமையால் பெற்ற பெயர்" என்பார் இளம்பூரணர். அகப்பொருள், புறப்பொருள் இரண்டினும் எஞ்சி நின்றன கூறுவதால் இவ்வியலை ஒழிபியல் எனினும் இழுக்காது என்பர்.

"அகப்பொருள் ஒழுக்கத்தில் தலைவன், தலைவி, தோழி முதலியோர் உரையாடல்களில் அமைதற்குரிய பொருள் வகையினை சிறப்பு முறையில் விரித்துக் கூறுவது பொருளியல் என்பார் வெள்ளைவாரணனார்..

**உலகத்துப்பொருட்கள் பேசுவதாகக் கூறுதல்**

அகப்பொருள் ஒழுக்கத்தில் தலைவன், தலைவி இருவரும் ஒருவர்மீது ஒருவர் கொண்ட வேட்கை முற்றிய நிலையில் கூறும் கூற்றுக்களின் பொதுத்தன்மை குறித்துக் கூறுகையில் உலகத்துப் பொருட்கள் பேசுவதாகக் கூறுவர். இதனை,

*"நோயும் இன்பமும் இருவகை நிலையில்*
*காமம் கண்ணிய மரபிடை தெரிய*
*எட்டன் பகுதியும் விளங்க ஒட்டிய*
*உறுப்புடை யதுபோல் உணர்வுடை யதுபோல்*
*மறுத்துரைப் பதுபோல் நெஞ்சோடு புணர்த்துஞ்*
*சொல்லா மரபின் அவற்றொடு கெழிஇச்*
*செய்யா மரபின் தொழிற்படுத் தடக்கியும்*
*அவரவர் உறுபிணி தமபோர் சேர்த்தியும்*
*அறிவும் புலனும் வேறுபட நிறீஇ*
*இருபெயர் மூன்றும் உரிய வாக*
*உவம வாயிற் படுத்தலும் உவமம்*
*ஒன்றிடத் திருவர்க்கும் உரியபாற் கிளவி"1*

என்ற நூற்பா உணர்த்துகிறது.

இந்நூற்பாவில் துன்பமும், இன்பமுமாகிய இருவகை நிலையில் ஒருவர்மீது ஒருவர் மிகுந்த விருப்பம் கொள்ளும் முறைமையில் எண்வகை மெய்ப்பாடுகளும் விளங்க, தம்போல் உறுப்புகளை உடையது போலவும், தம்போல் உணர்வுடையது போலவும் தமது கூற்றினை மறுத்துரைப்பது போலவும், தமது நெஞ்சோடு சேர்த்துக் கூறியும், கூறும் ஆற்றல் இல்லாத விலங்கு, பறவை முதலியவற்றோடு இணைத்துக்கூறியும் அவை செய்ய முடியாத செயல்களை செய்தது போலவும் இன்னபிறவும் தலைவன், தலைவி எனும் இருவருக்கும் உரிய ஒரு கூற்றுக் கிளவியாகும் எனும் செய்தி விளக்கப்பட்டுள்ளது.

தலைவனும் தலைவியும் காமம் மிகுந்தவிடத்தும் பிரிவாற்றலமையாலும் வண்டு, நாரை (குருகு), கிள்ளை போன்ற உயிர்ப்பொருள்களையும், கடல், கானல்,தென்றல், நிலவு போன்ற இயற்கைப் பொருட்களையும் தூது விடுக்கும்போது உள்ள மனநிலையைக் கூறுவதாக இந்நூற்பா அமைந்துள்ளது.

மேலும் தலைவனும் தலைவியும் பிரிந்துள்ள நிலையில் கனவொடு பேசுதலும் உண்டு என்பதை,

*"கனவும் உரித்தால் அவ்விடத்தான"2*

என்ற நூற்பா கூறிச்செல்கிறது.

**தோழி அறத்தொடு நிற்றல்**

தலைவனோடு தலைவிக்குண்டான களவொழுக்கத்தைப் பெற்றோர்க்கு அறிவித்தல் வேண்டும் என்ற நற்கருத்தினைக் கொண்டவளாகிய தோழியின் அறத்தொடு நிற்றல் நிலை சுட்டப்பட்டுள்ளது. அந்நிலையானது ஏழு வகையான கூற்றுக்களை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது என்பதை

*"எளித்தல் ஏத்தல் வேட்கை உரைத்தல்*
*கூறுதல் உசாஅதல் ஏதீடு தலைப்பாடு*
*உண்மை செப்பும் கிளவியொடு தொகை இய*
*அவ்வெழு வகைய என்மனார் புலவர்"3*

என்னும் நூற்பா எடுத்துரைக்கிறது.

தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்கும்பொழுது தலைவன் தங்களிடம் எளியனாக நடந்து கொண்டான் என்றும், அருளும் சிறப்பும் உடைய உயர்ந்தவன் என்றும், தலைவனும் தலைவியும் ஒருவர்பால் ஒருவர் வேட்கை உடையவர்கள் என்றும் அத்தகைய தலைவனுக்கே தலைவியை மணம்முடிக்க வேண்டும் என்றும் பலவாறு கூறுவாள். களிறு, புலி, நாய் போன்றவற்றிலிருந்து எம்மைக்காத்தான் எனவும், தலைவனும் தலைவியும் இயல்பாகச் சந்தித்துக் கொண்டனர்

எனவும் கூறுவாள். அவ்வாறு சந்தித்தபோது நிகழ்ந்தவற்றை உள்ளது உள்ளவாறே கூறுகிறேன் என எழுவகையான கூற்றுக்களை உள்ளடக்கியதாக அறத்தொடு நிற்றல் நிலை தோழியின் மூலம் உணர்த்தப்படுகிறது.

**பெண்டிர்க்குரிய சிறப்பியல்புகள்**

பெண்டிர்க்குரிய இயல்புகளுள் குறிப்பிடத்தகுந்தவைகளாகக் கருதப்படுவது குறித்த செய்தியை,

*"செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்*
*அறிவும் அருமையும் பெண்பா லான"4*

என்ற நூற்பாவின் மூலம் கூறிச் செல்கிறார்.

செறிவு என்பது அடக்கியொழுகும் தன்மை, நிறைவு என்பது அமைதி காக்கும் தன்மை, செம்மை என்பது யாவரிடத்தும் மனங்கோடாதிருத்தல், செப்பு என்பது உண்மையை வலியுறுத்தும் சொல்வண்ணம், அறிவு என்பது தீமைப்பயப்பனவற்றை விலக்கி நன்மையைப் பற்றியொழுகும் அறிவுத்திறன், அருமை என்பது பிறர் உள்ளக்கருத்தறியும் அரிய இயல்பு என்பன போன்றவற்றை பெண்டிர்க்குரிய சிறப்பில்புகளாகத் தொல்காப்பியர் கூறுகிறார்.

**தோழிகூற்றின் பயன்**

தலைவன், தலைவியின் வரைவிற்காக பெருமுயற்சி மேற்கொள்ளும் தோழி அறத்தொடு நிற்றல்நிலையை மேற்கொள்கிறாள். அம்முயற்சியின் தொடர்ச்சியாக அவ்விருவருக்குமிடையே உள்ள அன்பு மேலோங்கி தலைவன் விரைவில் திருமணம் செய்து கொள்வான் என தலைவியின் நம்பிக்கையை வளர்ப்பவளாகவும் தோழி அமைகிறாள். அதற்கேற்றவாறு தோழியின் கூற்று அமைவதை,

*"பொழுதும் ஆறும் காப்புமென் றிவற்றின்*
*வழுவி னாகிய குற்றம் காட்டலும்*
*தன்னை அழிதலும் அவன்ஊறு அஞ்சலும்*
*இரவினும் பகலினும் நீவா என்றலும்*
*நன்மையும் தீமையும் பிறிதினைக் கூறலும்*
*புரைபட வந்த அன்னவை பிறவும்*
*வரைதல் வேட்கைப் பொருள என்ப"5*

என்ற நூற்பா வழி உணரலாம்.

களவிற் கூட்டத்திற்குரிய இரவுப்பொழுதும் அப்பொழுதில் அவன் வரும் வழியச்சமும் அவ்வழியில் உள்ள காவலும் இம்மூன்றின்கண் உள்ள தீமைகளை எடுத்துக்கூறுகிறாள் தோழி. இரவில் தலைவன் வருவதை நினைத்து வருத்தப்படும் தோழி, அவனுக்கு நன்மையாகவும் தீமையாகவும் வரும் பொருட்களை எடுத்துக்கூறி தலைவனுடைய வரவை ஒழுங்குபடுத்தும் பணியை மேற்கொள்கிறாள். மேலும் தலைவன்மேல் உள்ள அன்பு கெடாவண்ணம், நம்பிக்கை வளரும் வகையில் விரைவில் வரைந்து கொள்வான் எனக்கூறித் தலைவின் உள்ளத்தைப் பக்குவப்படுத்தும் தோழியின் பொருள்மிக்க கூற்று பாராட்டத்தக்கது என்பர் சான்றோர்.

**தலைமகனின் ஊர்தி**

களவுக்காலத்தில் தேர், யானை, குதிரை மற்றும் பிற ஊர்திகளிலும் செல்லுதற்கு உரியவன் தலைவன் என்று கூறுவதை,

*"தேரும் யானையும் குதிரையும் பிறவும் .*
*ஊர்ந்தனர் இயங்கலும் உரியர் என்ப"6*

 ISSN: 2320-4842
Vol-17 No. 04 October-December 2023

என்கிறார் தொல்காப்பியர். அஃதாவது தேர், யானை, குதிரை மற்றும் பிற ஊர்திகளில் வழக்கமாக இயங்கிக் கொண்டிருக்கும் தலைவன் களவுக்காலத்தில் மட்டும் தனித்தியங்கினால் பார்ப்பவர்க்கு ஐயம் உண்டாகும். ஆதலால் களவுக்காலமாயினும் பிறருக்கு ஐயம் ஏற்படாமல் இருக்க எப்பொழுதும் இயல்பாக வருவதுபோல் மேற்சொன்ன ஊர்தியில் இயங்குதலே தலைவனுக்கு நன்மையைத்தரும் என்கிறார். அதனாலேயே ஊர்ந்தனர் இயங்கலும் உரியர் என்றார் ஆசிரியர்.

**தலைவியைத் தவிர்த்தல் குற்றமன்று .**

வினைமேற் செல்வதற்காகத் தலைவன் தலைவியை விட்டுப் பிரிய எண்ணுகிறான். அப்பொழுது தானும் உடன் வருவதாகக் கூறுகிறாள் தலைவி. அவள் உடன்வந்தால் துன்புறுவாள் எனக்கருதிய தலைவன் அவள் வராமல் இருப்பதற்காக தான் செல்லவிருக்கும் பாதையின் நிலையை எடுத்துக் கூறி அவள் வரவைத் தடுக்கிறான். இதனை,

*"சுரமென மொழிதலும் வரைநிலை யன்றே"7*

என்ற நூற்பாவின் வழி வெளிப்படுத்துகிறார் ஆசிரியர்.

உன்னைப் பிரிவதென்பது என் நோக்கமல்ல, உடன் அழைத்துச் செல்லவேண்டாம் என்பதும் என் நோக்கமல்ல. ஆனாலும் நம் வாழ்வு செழிக்கவும், பெரும் புகழையடையவும் பிரிவு என்பது தவிர்க்க முடியாதது. அதனால் உன்னையும் உடன் அழைத்துச்செல்வது என்பது அரிதான ஒன்று. ஏனென்றால் நான் செல்லும் பாதை பாலைவனப்பாதையாகும். அப்பாலைவனம் உடனுக்கு வெம்மையைத்தரக்கூடியது. அவ்வெம்மையை உன் உடல் தாங்கிக் கொள்ளாது. ஆகையால் நீ உடன்வரவேண்டாம் என்று தலைவியின் வரவைத் தவிர்க்க எண்ணுகிறான் தலைவன். தலைவியைத் தவிர்க்கும் தலைவனின் இச்செயல் குற்றமன்று என்பர் சான்றோர்.

**அறத்திற்கான அழிவுப்பொருளை ஏற்கார்**

அறத்திற்கு அழிவுதரும் ஒழுகாறுகள் பொருள் இலக்கணத்திற்குப் பயன்படுமாறு வந்தாலும் அவை உலகியலில் வழங்கப்படும் வழக்கென்று சான்றோரால் ஏற்றுக்கொள்ளப்படாது நிராகரிக்கப்படும் என்பதை,

*"அறக்கழி அடையன பொருட்பயன் வரினே*
*வழக்கென வழங்கலும் பழித்த தென்ப" 8*

எனும் நூற்பாவழி விளக்குகிறார் தொல்காப்பியர்.

**பொருள் இலக்கணம் உணர்த்தும் முறை**

வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாகக்கருதப்படும் அறம், பொருள், இன்பம் ஆகிய பொருட்களை எடுத்துரைக்கும்போது மக்களது உயிர்ப்பண்பாகிய நாணம் நீங்காமைக்குரிய நன்னெறிக்கண் அமைந்து அகமும் புறமுமாகிய பொருள்வழிகளைப் புணர்ந்து கூறவேண்டும் என்பதை,

*"மிக்கபொருளின் உட்பொருள் வகை புணர்க்க*
*நாணுத் தலைப்பிரியா நல்வழிப் படுத்தே"9*

என்னும் நூற்பா வழி உணரலாம். மேலும் தலைமக்கட்கு ஆகாதன குறித்துக் கூறுகையில்,

*"சினனே பேதைமை நிம்பிரி நல்குரவு*
*அனைநால் வகையும் சிறப்பொடு வருமே"10*

என்கிறார். அகத்திணைக்கண் தலைமைக்கட்கு ஆகாத நிலைகள் எனக்கூறும்பொருட்டு சினம், ஏழ்மை,பொறாமை, வறுமை என்ற நான்கினைக் கூறுகிறார். சினம் என்கிறபொழுது கோபம் நீடித்தல் என்ற பொருளில் கூறுவது குறிப்பிடத்தக்கது.

**காட்டலாகாத பொருட்கள்**

சில பொருட்களை இப்பொழுதம் இது எனக் காட்ட முடியும். சில பொருட்களைக் காட்ட முடியாது. அதற்குப் பதிலாக மனதினால் உணர்ந்த முடியும் என்பதை,

*"ஒப்பும் உருவும் வெறுப்பும் என்றா*
*கற்பும் ஏரும் எழிலும் என்றா*
*சாயலும் நாணும் மடனும் என்றா*
*நோயும் வேட்டையும் நுகர்வும் என்றாங்கு*
*ஆவயின் வரூஉங் கிளவி எல்லாம்*
*நாட்டியல் மரபின் நெஞ்சுகொளின் அல்லது*
*காட்ட லாகாப் பொருள் என்ப"11*

என்று ஒப்பு,உரு,வெறுப்பு, கற்பு, ஏர், எழில், சாயல், நாண், மடன், நோய், வேட்கை, நுகர்வு என நாட்டின் பல்வேறு இடங்களில் வழங்குகின்ற சொற்கள் எல்லாம் மனத்தால் உணர்த்தவல்லது. அதாவது ஒப்பு என்பது தந்தையையொக்கும் மகன் எனும் பொருள்பட வருவது, உரு என்பது உட்கு என்பர். உட்காவது அஞ்சுதலாகிய மனநிகழ்ச்சி; வெறுப்பு என்பது செறிவு; அது அடக்கங்குறித்து நின்றது என்பர். கற்பு என்பது மாந்தர் மாட்டு நிகழும் மனநிகழ்ச்சி, ஏர் என்பது கண்டார்க்கு இன்பம் தரும் பொலிவு தோன்றும் நிறவேறுபாடு.

எழில் என்பது அழகு, சாயல் என்பது மென்மைத்தன்மை, நாண் என்பது வெட்கப்படுதலாகிய மனநிகழ்ச்சி, மடன் என்பது பெண்டிற்குள்ளதோர் இயல்பு, நோய் என்பது துன்பத்தைக் குறிக்கும், வேட்கை என்பது யாதானும் ஒன்றைப்பெற வேண்டுமெனும் மன நிகழ்ச்சி, நுகர்வு என்பது நுகர்ந்துயிர்க்க வேண்டும் எனும் ஆசை.

மேற்கண்டவற்றையெல்லாம் "இது பொருள்" எனகாட்டக்கூடிய பொருளன்று என்று உணர்ந்தோர் சொல்வர் என்கிறது தொல்காப்பியம்.

**முடிவுரை**

இமைத்தல் இல்லா கண்களை உடைய வானவர் உலகத்தினும் எறிகின்ற அலைகளையுடைய கடலால் சூழப்பட்டுள்ள இவ்வுலகில் மேற்கூறப்பட்ட உணர்வுகள் இல்லையென மறுப்பவர் எவரும் எக்காலத்தும் இல்லை. ஆதலால் இவை என்றும் எங்கும் உள்ள பொருள்களே என்பதை,

*"இமையோர் தேஎத்தும் எறிகடல் வரைப்பினும்*
*அவையில் காலம் இன்மை யான"12*

என்னும் நூற்பா வழி அறிய முடிகிறது. இதுபோன்று தொல்காப்பியப் பொருளதிகாரப் பொருளியில் பல கூறுபாடுகளை உள்ளடக்கியதாக உள்ளது.

**மேற்கோள் விளக்கம்**

1. தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுளியல், நூ.194.
2. தொல்காப்பியம், பொருளதிகாரம், நூ.195.
3. தொல்காப்பியம், பொருளதிகாரம், நூ.204.
4. மேலது., நூ.206.
5. மேலது., நூ.207.
6. மேலது., நூ.209.
7. மேலது., நூ.212.
8. மேலது., நூ.214.
9. மேலது., நூ.215.
10. மேலது., நூ.241.

11. மேலது., நூ.243.
12. மேலது., நூ.244.

**துணை நூற்பட்டியல்**

1. இளம்பூரணனார் உரை, தொல்காப்பியம் பொருளதிகாரம், சாரதா பதிப்பகம், ராயப்பேட்டை, சென்னை 600 014.